IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.160/2022

Deposition of Witness for P.W.18

| | | |
|---|---|---|
| NAME | - | டாக்டர்.பாலகிருஷ்ணன் |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | உதவி பேராசிரியர், எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை, வேலூர் மருத்துவமனை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது வேலூர் அரசு மருத்துவமனையில் எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிகிறேன். நான் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் 10.06.2020 பணியிலிருந்தபோது மாலை 05.25 மணிக்கு சின்னம்மாள் வயது 60, க/பெ.கிருஷ்ணன் என்பவர் அவருடைய மகன் சிகிச்சைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் சேர்த்தார். நான் சின்னம்மாளை விசாரணை செய்தபோது 7 அடையாளம் தெரிந்த நபர்களால் 10.06.2020 சுமார் 03.50 மணியளவில் கத்தி மற்றும் மரக்கட்டையால் அவருடைய வீட்டிலிருந்தபோது தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வலது முழங்காலில் குத்திய காயம் கோணலாக இருந்தது. கிழிந்த காயம் 2x1x1 செ.மீ. இடது முழங்காலில் காணப்பட்டது. இடது முழங்கால் கோணலாக இருந்தது. கிழிந்த காயம் 1x.5x.5 செ.மீ. இடது முன்னங்கையில், மற்றும் கிழிந்த காயம் 1x1x.5 செ.மீ. வலது முழங்கையில் கோணலாகவும் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி சிகிச்சை அளித்தேன். அவசர விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.31 ஆகும். அவருக்கு வலது காலில் இரண்டு எலும்புகள் முறிவு காணப்பட்டது. இடது

காலில் இரண்டு எலும்புகல் முறிந்து காணப்பட்டது. வலது கையில் இரண்டு எலும்புகள் முறிந்து காணப்பட்டது. இடது முன்னங்கையில் 2 மற்றும் 4 ஆம் விரல் எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். காயச் சான்றிதழ் அ.த.சா.ஆ.32 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருட்களான கடப்பாறை, மரக்கட்டையினால் மேற் சொன்ன காயங்கள் ஏற்படுமா என்றால் வாய்ப்புள்ளது.

<u>குறுக்கு விசாரணை-</u>

சின்னம்மாளுக்கு மொத்தம் நான்கு காயங்கள் இருந்தது. நான்கு காயங்களும் நான்கு முறை அடிக்கும்போது ஏற்பட்டிருக்கும். கிழிந்த காயங்கள் 2, 3, 4 ஆகியவை மரக்கட்டையால் ஏற்பட வாய்ப்பு இல்லை. கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. 1 வது காயம் குத்துக் காயம் மரக்கட்டையால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சம்பவம் எப்படி நடந்தது என்று சின்னம்மாளை விசாரிக்கும்போது அவருடன் வந்த மகனும் சம்பவத்தைப் பற்றி சொன்னார். விபத்து பதிவேட்டில் தெரிந்த நான்கு பேர் என எழுதப்பட்டு பின்னர் தெரிந்த 7 பேர் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அவ்வாறு திருத்தத்திற்கான காரணம் சின்னம்மாள் தெரிந்த நான்கு பேர் என சொன்னார். அவருடைய மகன் 7 பேர் என சொன்னதால் நான் 7 என திருத்தி எழுதினேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.20 19:48:55 +0600

Additional District Judge(FTC),
Vellore